Toronto Community Housing

# குடியிருப்பாளர் பங்குபற்றும் திட்டம் தகவல் திரட்டு




இந்த ஆவணத்தை உங்களுக்கு விளங்கும் வடிவத்தில் பெற அல்லது மொழிபெயர்ப்பு வடிவத்தைப் பெற, பின்வரும் வழிகளில் தொடர்பு கொள்ளுங்கள் ரநடா;வழசழவெழாழரளபைெ.உ ய அல்லது 416-981-5500.

# உள்ளடக்க அட்டவணை






அறிமுகம் 3
இயக்குனர் சபை எதனை அங்கீகரித்தது? 4
பின்னணி 5
குடியிருப்பாளர் ஈடுபாடு 6
குடியிருப்பாளர் பங்கேற்கும் திட்ட தெரிவுகள் 7
புதிய குடியிருப்பாளர் பங்கேற்கும் திட்டம் எவ்வாறு செயற்படும்? 8
கட்டிட அல்லது ரவுண்ஹவுஸ் மட்டம் 8
சமூக அல்லது செயற்பாட்டுப் பிரிவு மட்டம் 9
நகர மட்டம் 10
அடுத்து என்ன வருகிறது? 10
உள்;ர் பங்கேற்கும் தெரிவுகள் பற்றி நீங்கள் அறிய விரும்புவது என்ன? 11
வாக்களிப்பு நடைமுறை பொதுவிளக்கம் 15
உங்கள் உள்;ர் பங்கேற்பு தெரிவுகள் தொடர்பான கேள்வி-பதில் 16
ஈடுபாடு கொள்வது 17
யாரைத் தொடர்பு கொள்வது? 18


**முனைப்பான சமூகங்களை உருவாக்கத் தேவையான குடியிருப்பாளர் முன்னுரிமைகளை வெளிப்படுத்தல்**

# அறிமுகம்

**ரொறன்ரோ சமூக வீடமைப்புக்கு குடியிருப்பாளரும் அலுவலர்களும் புதிய குடியிருப்பாளர் பங்கேற்கும் திட்டமொன்றை உருவாக்கியுள்ளனர்.**

கடந்த சில வருடங்களாக குடியிருப்பாளர்களும் அலுவலர்களும் இணைந்த புதிய திட்டத்துக்கான தெரிவுகளை உருவாக்கினர். இது கூடுதலான குடியிருப்பாளர்களை சமூகத்தில் ஈடுபட வைப்பதற்கு ஊக்குவிக்கவும் உரிமைகளை வழங்கவும்.

புதுப்பிக்கப்பட்ட குடியிருப்பாளர் பங்கேற்கும் திட்டத்தை உருவாக்குவதன் நோக்கம் சகலரையும் உள்வாங்குவதோடு அனைவரும் அணுகக்கூடியதும், வெளிப்படைத் தன்மையுடையதுமாக குடியிருப்பாளர் அடையாளப்படுத்தும் முன்னுரிமைகளை கண்டடையவுமாகும்.

புதிய திட்டம் செயற்படுத்தும் முன்னேற்பாடு குடியிருப்பாளர் சேவை கவுன்சிலால் 2019 மே மாதத்திலும், இயக்குனர் சபையால் 2019 ஜூலை மாதமும் அங்கீகரிக்கப்பட்டன.

இந்த தகவல் திரட்டை வாசித்த பின்னர் நீங்கள் உள்ளீர்க்கப்பட்டு சமூகத்துடன் இணைந்து செயற்படவும், எவ்வாறு இதனைச் செய்வது என தெரிந்து கொள்வீர்கள் எனவும் நாம் நம்புகிறோம்.

**உங்கள் சமூகம், உங்கள் குரல்!**



# இயக்குனர் சபை எதனை அங்கீகரித்தது?

புதிய திட்டம் செயற்படுத்தும் முன்னேற்பாடு, ரொறன்ரோ சமூக வீடமைப்பு இயக்குனர் சபையால் 2019 ஜூலை மாதம் 19ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டது.

## குடியிருப்பாளர் பங்கேற்கும் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட பிரதான அம்சங்கள் வருமாறு:



1. மூன்று மட்டங்களைக் கொண்ட ஒரு கட்டமைப்பு: கட்டிடம் அல்லது ரவுண்ஹவுஸ் மட்டம், சமூக அல்லது செயற்பாட்டுப் பிரிவு மட்டம் மற்றும் நகர மட்டம்.
2. புதுப்பிக்கப்பட்ட குடியிருப்பாளர் பங்கேற்கும் திட்டத்தில் ஒரு முடிவை எடுப்பதற்கு குடியிருப்பாளருக்கு சந்தர்ப்பம் வழங்குதல்.
3. கட்டிட அல்லது ரவுண்ஹவுஸ் மட்டத்தில் தங்கள் சமூகத்துக்குப் பொருந்தக்கூடிய ஒன்றை நான்கிலிருந்து வாக்களிப்பதன் மூலம் தெரிவு செய்யும் வாய்ப்பை குடியிருப்பாளருக்கு வழங்குதல்.
4. குடியிருப்பாளர் பங்கேற்கும் திட்டத்துக்கு மேலதிகமாக குடியிருப்பாளர் சங்கங்களை உருவாக்க அனுமதித்தல்.
5. ரொறன்ரோ சமூக வீடமைப்புக்கு பணித்தல்:
   - உள்;ர் பங்கேற்கும் திட்டத்தில் தமது முன்னுரிமையைக் குடியிருப்பாளர் தெரிவதற்கு வாக்களிக்கும் முறையை வடிவமைத்தல்
   - வெவ்வேறு வகையான உள்;ர் பங்கேற்கும் திட்டத் தெரிவுகள் மற்றும் தெரியும் செயற்பாடுகள் பற்றி குடியிருப்பாளருக்கு அறிவிக்கும் தொடர்பாடல் செயல்முறையை உருவாக்கிச் செயற்படுத்தல்
   - குடியிருப்பாளர் சமூக நடவடிக்கை அமைப்புகளை (முன்னைய குடியிருப்பாளர் சபைகள்) மற்றும் நகரம் முழுவதற்குமான குடியிருப்பாளர் மற்றும் அலுவலர் நெறிப்படுத்தும் மேற்பார்வைக் குழுவையும் உருவாக்குதல்
   - நகரம் முழுவதற்குமான குடியிருப்பாளர் மற்றும் அலுவலர் பங்கேற்கும் ஆலோசனைக் குழுவின் 52 பரிந்துரைகளை முன்னெடுத்தல்
   - தெரிவான அல்லது நியமனமான சமூகப் பிரதிநிதிகளின் வகிபாகம் மற்றும் பொறுப்புகளின் செயற்பாட்டு நெறிமுறைகளை மீள்பரிசீலித்து, அவர்களின் செயல்வடிவத்துக்கான காலஎல்லை வழித்தடம் போன்றவைகளை அமைத்தல்

# பின்னணி

## எதற்காக குடியிருப்பாளர் பங்கேற்பு?

குடியிருப்பாளர்களே தங்கள் சமூகத் தேவைகளையும் சொத்துகளையும் பற்றி நன்கு அறிந்த நிலையிலுள்ளவர்கள். ரொறன்ரோ சமூக வீடமைப்பின் சேவை வழங்கலை முன்னேற்றி, குடியிருப்பாளர் இலக்குடைய அனுபவங்களை மேலும் பெற்று அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த குடியிருப்பாளர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படுகிறது.

குடியிருப்பாளர் குறைகள் கேட்கப்படுவது உறுதி செய்யப்பட வேண்டும். ரொறன்ரோ சமூக வீடமைப்பானது கட்டுரம் வாய்ந்ததும் திறமையான குடியிருப்பாளர் பங்கேற்புடன் அனைத்து குடியிருப்பாளர்களுக்கும் சம சந்தர்ப்பத்தை வழங்குவதாகவும் அமைந்தது.

## குடியிருப்பாளர் பங்கேற்கும் திட்டம் என்றால் என்ன?

ரொறன்ரோ சமூக வீடமைப்பில் வசிக்கும் குடியிருப்பாளர்களை பங்கேற்க வைக்கும் ஒரு அடிப்படையான செயற்பா்டு. இத்திட்டம் தற்போதுள்ள குடியிருப்பாளர் பங்கேற்கும் திட்டத்தை மேலும் பலப்படுத்துவதுடன் உள்;ர் முடிவெடுக்கும் விடயங்களில் குடியிருப்பாளர்களின் பங்களிப்பை அதிகரிக்கச் செய்கிறது.

## நாங்கள் எவ்வாறு இங்கு வந்தோம்?


- **2015:** மேயரின் செயலணியின் இறுதி அறிக்கை மற்றும் ரொறன்ரோ சமூக வீடமைப்பு பரிந்துரைத்த தற்போதைய குடியிருப்பாளர் பங்கேற்கும் திட்டத்தை மேலும் பலப்படுத்தும் நடைமுறைத்திட்டத்தின் முதலாம் கட்டம்.
- **2016:** குடியிருப்பாளர் குழுவொன்று உருவாக்கி, அமுலாக்கி பரிசீலித்த ஷரேக் 5’ என்ற மதிப்பீட்டைத் தொடர்ந்து, குடியிருப்பாளர் பங்கேற்கும் திட்ட மாற்றங்கள் உள்ளிட்ட பரிந்துரைகளை நகரம் முழுவதற்குமான குடியிருப்பாளர் - அலுவலர் பங்கேற்பு ஆலோசனைக் குழுவுக்கு சமர்ப்பித்தது.
- **2017:** மேற்படி ஆலோசனைக் குழு 52 பரிந்துரைகளை குடியிருப்பாளர் ஆலோசனைச் சபைக்கு சமர்ப்பித்தது. இந்த ஆலோசனைகள் ஆட்சிமுறை, பொறுப்புக்கூறல், கட்டிடங்களின் விபரம், தொடர்பாடல், குடியிருப்பாளர் பங்கேற்பு, கட்டிடங்களின் கொள்ளளவு சம்பந்தமானவை.
- **2018:** ரொறன்ரோ சமூக வீடமைப்பு மேற்படி ஆலோசனைக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும் கடப்பாடுடையது.

# குடியிருப்பாளர் ஈடுபாடு

ஆலோசனை செயற்பாட்டினூடாக, ரொறன்ரோ சமூக வீடமைப்பு குடியிருப்பாளர்களுடன் பணியாற்றி அவர்களுடைய உள்;ர் உரிமைகளை அடையாளம் கண்டது. புதுப்பிக்கப்பட்ட திட்டமொன்று வேண்டுமென பின்வருவனவற்றுக்காக அவர்கள் விரும்பினர்:

- உள்;ர் முடிவெடுக்கும் விடயங்களில் குடியிருப்பாளர் பங்களிப்பு
- குடியிருப்பாளர்களின் கொள்ளளவு - வயது, இனம், பால், சமயம் மற்றும் வலு என்பவற்றுக்கு அப்பால் - தங்கள் சமூகத்தில் அர்த்தமுள்ளதாக அணுகுமுறையுள்ள பங்கேற்பில் அவர்களை உள்வாங்க

## 2018 முன்னிலைப்படுத்தப்பட்டவை



### 3இ326 குடியிருப்பாளர்கள்

உள்;ர் முன்னுரிமைகளை தெரிந்தெடுக்க கட்டிடங்களிலும் ரவுண்ஹவுஸ்களிலும் சமூகக் கூட்டங்கள்


### 10இ205 குடியிருப்பாளர்கள்

டொற் - மோக்ரசியை பயன்படுத்தி சமூக முன்னுரிமைகளை கண்டறிய வாக்களித்தனர்.




### 2இ380 குடியிருப்பாளர்கள்

குடியிருப்பாளர் அனுபவ மதிப்பீட்டை நிரப்பினர்



### 125 குடியிருப்பாளர்கள்

குடியிருப்பாளர் தன்னார்வ கொள்கை ஆலோசனைகளில் பங்குபற்றினர்



### 303 குடியிருப்பாளர்கள்

சமூக ஆலோசனை அமர்வுகளில் பங்குபற்றினர்

### 292 குடியிருப்பாளர்கள்

சமூக முகநூல் கருத்துக் குழுவில் பங்கேற்றவர்கள்

## 1. கட்டிட அல்லது ரவுண்ஹவுஸ் மட்டம்

கட்டிட அல்லது ரவுண்ஹவுஸ் மட்டத்தை யார் உருவாக்குகிறார்கள்?

1. ஓவ்வொரு 250 வீட்டுத் தொகுதிகளுக்கும் சமூக பிரதிநிகள், இரண்டு பிரதிநிதிகள் குடியிருப்பாளர்களால் தெரிவு செய்யப்படுவர்
2. சகல குடியிருப்பாளருக்குமான கட்டிட அல்லது ரவுண்ஹவுஸ் கமிட்டி






## 2. ச சமூக அல்லது செயற்பாட்டுப் பிரிவு மட்டம்

குடியிருப்பாளர் சமூக செயற்பாட்டுத் திட்டத்துக்கு கட்டிட அல்லது ரவுண்ஹவுஸ் மட்டத்தில் குடியிருப்பாளர்கள் தெரிவு முறையில் அல்லது வாக்களிப்பு முறையில் தெரிவாவர்.



## 3. நகர மட்டம்

நகர மட்ட குடியிருப்பாளர் - அலுவலர் ஆட்சி மேற்பார்வைக் குழுவுக்கு குடியிருப்பாளர்கள் விண்ணப்பிக்கும் முறையூடாக தெரிவாவர்.



**குடியிருப்பாளர் பங்கேற்கும் நடைமுறை நுபெயபநஅநவெ ஞூலளவநஅ ழிவழைளெ**

# புதிய குடியிருப்பாளர் பங்கேற்கும் திட்டம் எவ்வாறு செயற்படுகிறது?

## புதுப்பிக்கப்பட்ட குடியிருப்பாளர் பங்குபற்றும் திட்ட அமைப்பில் மூன்று மட்டங்கள் உள்ளன.

## கட்டிட அல்லது ரவுண்ஹவுஸ் மட்டம்




கட்டிட அல்லது ரவுண்ஹவுஸ் மட்டம் எனப்படுவது தனித்துவமான மற்றும் பன்மைத்துவ குழுக்களைக் கொண்ட குடியிருப்பாளர்களின் கட்டிடம் அல்லது ரவுண்ஹவுஸ் சமூகமாகும். கட்டிட மட்டத்தில் நான்கு உள்;ர் பங்கேற்பு உண்டு: சமூக பிரதிநிதிகள், கட்டிட மற்றும் ரவுண்ஹவுஸ் கமிட்டி மற்றும் குடியிருப்பாளர் சங்கங்கள் மற்றும் பிரதிநிதிகள் இல்லாதவை.

கட்டிடத்தில் அல்லது ரவுண்ஹவுஸில் வகிக்கும் குடியிருப்பாளர்கள் தங்கள் சமூக செயற்திட்டத்தை கவனிப்பதுடன், குடியிருப்பாளர் அடையாளம் காட்டிய முன்னுரிமைகளையும், உள்;ர் தேவைகள் மற்றும் முன்னுரிமைகளையும் உள்ளடக்கியதாக இது அமையும்.

### பங்களிப்புக்கான சந்தர்ப்பங்கள்

### இங்கே: சமூக பிரதிநிதிகள்



**சமூக பிரதிநிதிகள்** (முன்பு குடியிருப்பாளர் பிரதிநிதிகள் என் அறியப்பட்டவர்கள்) குறிப்பிட்ட கட்டிட அல்லது ரவுண்ஹவு சமூக குடியிருப்பாளர்களால் வாக்களிப்பின் மூலம் தெரிவு செய்யப்பட்டவர்கள். குடியிருப்பாளர்களால் ஒவ்வொரு 250 குடியிருப்புகளுக்கும் இரண்டு பிரதிநிதிகளைத் தெரிவு செய்ய முடியும். தெரிவு செய்யப்பட்ட எல்லா பிரதிநிதிகளும் குடியிருப்பாளர் சமூக செயற்பாட்டு அமைப்பில் தங்கள் சமூகங்களை பிரதிநிதித்துவப்படுத்துவர். குடியிருப்பாளர் அனைவரும் சமூக பிரதிநிதி பதவிக்கு தேர்தலில் போட்டியிடலாம்.

## கட்டிட அல்லது ரவுண்ஹவுஸ் கமிட்டி



குறிப்பிட்ட கட்டிட அல்லது ரவுண்ஹவுஸ் சமூகத்திலுள்ள அனைத்து குடியிருப்பாளர்களும் கட்டிட அல்லது ரவுண்ஹவுஸ் கமிட்டியில் பங்கேற்க முடியும். குடியிருப்பாளர் சமூக செயற்திட்டத்தில் ஒவ்வொரு கட்டிட அல்லது ரவுண்ஹவுஸ் கமிட்டியும் இரண்டு உறுப்பினர்களை தங்கள் சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு தெரிவு செய்யும்.

## குடியிருப்பாளர் சங்கம்



குடியிருப்பாளர் சங்கமானது உறுப்பினர்களை அடிப்படையாகக் கொண்ட சுயாதீனமான குடியிருப்பாளர் குழுக்களாகும். ரொறன்ரோ சமூக வீடமைப்பில் சுயாதீனமாக இயங்கும் இவ்வமைப்புக்கு குடியிருப்பாளர் சமூகத் திட்டத்தில் இடம் இல்லை.

புதுப்பிக்கப்பட்ட குடியிருப்பாளர் பங்கேற்கும் திட்டத்துக்கு மேலதிகமாக ஒரு சமூகம் குடியிருப்பாளர் சங்கத்தை தெரிவு செய்யலாம்.

## பிரதிநிதிகள் இல்லை



பிரதிநிதிகளைத் தெரிவு செய்யாத சமூகத்துக்கு குடியிருப்பாளர் பங்கேற்கும் திட்டத்தில் சமூகப் பிரதிநிதித்துவம் இல்லை. சமூக செயற்திட்டத்தின் வெற்றியை கண்காணிக்கும் பணியிலும் எந்தப் பங்கேற்பும் இல்லை.

# சமூகம் அல்லது செயற்பாட்டுப் பிரிவு மட்டம்




குடியிருப்பாளர் சமூக செயற்திட்டத்தில் (முன்னைய குடியிருப்பாளர் சபை) ஒவ்வொரு கட்டிட அல்லது ரவுண்ஹவுஸிலிருந்தும் தேர்தலில் தெரிவாகும் அல்லது தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகள் தங்கள் சமூகம் சார்பில் இடம்பெறுவர். மேற்படி செயற்திட்டமானது குடியிருப்பாளர்கள் - அலுவலர் மற்றும் பங்காளர்களுடன் இணைந்து சமூக மட்டத்தில் குடியிருப்பாளர்கள் அடையாளம் காட்டிய முன்னுரிமைகளை எடுத்துச் செல்லும்.



# நகர மட்டம்

நகரம் முழுவதற்குமான குடியிருப்பாளர் - அலுவலர் ஆட்சி நிர்வாக மேற்பார்வைப் பிரிவில் குடியிருப்பாளர்களும் அலுவலர்களும் இடம்பெறுவர். குடியிருப்பாளர் பங்கேற்கும் திட்டத்திற்கான வகை துறை வளங்களை ஏற்படுத்துவதுடன் பொறுப்புக்கூறலுக்கானதாகவும் இக்குழு அமையும். குடியிருப்பாளர்களையும் அலுவலர்களையும் உள்ளடக்கிய இக்குழு, கிடைக்கும் விண்ணப்பங்க;டாக இதற்கான உறுப்பினர்களைத் தெரிவு செய்யும்.

# அடுத்து வருவது என்ன

புதுப்பிக்கப்பட்ட குடியிருப்பாளர் பங்கேற்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் அடுத்த கட்டங்கள்:





- தங்கள் உள்;ர் பங்கேற்கும் தெரிவுக்கு சமூகங்கள் வாக்களிப்பது
- கட்டிடங்கள்.ஃ.ரவுண்ஹவுஸ் சமூகங்கள் தெரிவுக்கு குழுக்களைத் தெரிவு செய்ய வாக்களிப்பது
- சமூக பிரதிநிதிகள் தெரிவுக்கு சமூகங்களிடையே குடியிருப்பாளர் தேர்தல்கள் நடத்துவது
- குடியிருப்பாளர் சமூக செயற்திட்டத்தை உருவாக்குதல்
- விண்ணப்ப முறையில் நகரம் முழுவதற்குமான குடியிருப்பாளர் - அலுவலர் ஆட்சி நிர்வாக மேற்பார்வைக் குழுவில் ஆலோசனைக் குழுவை உருவாக்குவது
- குடியிருப்பாளர் பங்கேற்கும் திட்டத்தில் குடியிருப்பாளர்களுக்கு அதற்கான பயிற்சியும் சந்தர்ப்பமும் வழங்குதல்






# உள்;ர் பங்கேற்கும் தெரிவுகள் பற்றி நீங்கள் அறிய வேண்டியது என்ன

குடியிருப்பாளர்கள் தங்கள் விருப்பத்துக்கேற்ப உள்;ர் பங்கேற்கும் திட்டத்துக்கு வாக்களிக்கும் சந்தர்ப்பம். **எந்தத் தெரிவுக்கு வாக்களிப்பதென்று தெரியவில்லை?** அதனை நீங்கள் முடிவெடுப்பதற்கான அட்டவணை கீழே:

| தெரிவு அடிப்படை | தெரிவு | தெரிவு |
|---|---|---|
| | **சமூக பிரதிநிதி**  | **கட்டிட.'.ரவுண்ஹவுஸ் கமிட்டி**  |
| **தெரிவு முறை**  | குடியிருப்பாளர்கள் தெரிவு செய்வது<br><br>ஆந்தந்த சமூகங்களிலிருந்து சகல குடியிருப்பாளர்களும் போட்டியிடவும் வாக்களிக்கவும் சந்தர்ப்பம். | சகல குடியிருப்பாளர்களும் பங்குபற்றலாம்<br><br>ஒரு கமிட்டியை உருவாக்குவதற்கு குறைந்தபட்ச குடியிருப்பாளர்கள் தேவை. |
| **உறுப்புரிமை**  | ஒவ்வொரு 250 குடியிருப்புகளுக்கும் இரண்டு சமூக பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுவர். தெரிவாகும் பிரதிநிதிகள் குடியிருப்பாளர் சமூக செயற்திட்டத்தில் இடம்பெறுவர். | குடியிருப்பாளர்களை இணைத்துக் கொள்ளுமாறு பகிரங்க அழைப்பு விடுக்கப்படும். ஒவ்வாரு கமிட்டியும், குடியிருப்பாளர் சமூக செயற்திட்டத்தில் இடம்பெறுவர். |
| **தகுதி**  | ரொறன்ரோ சமூக வீடமைப்பின் வாடகை ஒப்பந்தத்தில் இடம்பெறும் 16 வயதுடைய அல்லது அதற்கு மேலான வயதுடையவர்கள் பங்குபற்றலாம். | |
| **நிதி**  | சகல குடியிருப்பாளர்களும் தங்கள் முன்னுரிமைகளை முன்னெடுக்க தேவையான வளங்களுக்கு வேண்டுகோள்களை சமர்ப்பிக்கலாம் | |







# உள்;ர் பங்கேற்கும் தெரிவுகள் பற்றி நீங்கள் அறிய வேண்டியது என்ன

| தெரிவு அடிப்படை | தெரிவு | தெரிவு |
|---|---|---|
| | சமூக பிரதிநிதி  | கட்டிட.்.ரவுண்ஹவுஸ் கமிட்டி  |
| செயற்பாடு | அவர்களின் சமூக செயற்பாட்டுத் திட்டத்தை கண்காணிப்பதும் அமுல்படுத்துவதும் | |
| அலுவலர் பொறுப்புக்கூறல் | ரொறன்ரோ சமூக வீடமைப்பு அலுவலர் குடியிருப்பாளர் பங்கேற்கும் அந்தந்த சமூக பணிகளுக்கு ஆதரவு வழங்க பொறுப்புடையவர்கள் | |
| குடியிருப்பாளர் பொறுப்புக்கூறல் | குடியிருப்பாளர்கள் சாசன விழுமியங்கள் மற்றும் கொள்கைகளுடன் இணைந்ததாக நெறிமுறைகளுக்கு இயைவாக குடியிருப்பாளர் பங்கேற்கும் திட்டத்தை குடியிருப்பாளர்கள் கடைப்பிடிக்க வேண்டும்.<br>இந்த அணுகுமுறை நிபந்தனைகள், *மாற்றுத் திறனாளிகள் அணுக வசதியான ஒன்ராறியோ சட்டம் மற்றும் ரொறன்ரோ சமூக வீடமைப்பின் மனிதவுரிமை மற்றும் சமபங்கேற்கும் கொள்கைகளை உள்ளடக்கியது* | |




# உள்;ர் பங்கேற்கும் தெரிவுகள் பற்றி நீங்கள் அறிய வேண்டியது என்ன

| தெரிவு அடிப்படை | தெரிவு | தெரிவு |
|---|---|---|
| | **குடியிருப்பாளர் சங்கம்**  | **பிரதிநிதித்துவம் இல்லை**  |
| **தெரிவு முறை**  | குடியிருப்பாளர் சங்கம் தீர்மானிக்கும் | இது தேவையற்றது, பிரதிநிதித்துவம் இல்லை |
| **உறுப்புரிமை**  | குடியிருப்பாளர் சங்கம் தீர்மானிக்கும் | அங்கத்துவம் இல்லை |
| **தகுதி**  | குடியிருப்பாளர் சங்கம் சுயாதீனமானது | தகுதி இல்லை |
| **நிதி**  | சகல குடியிருப்பாளர்களும் தங்கள் முன்னுரிமைகளை முன்னெடுக்க தேவையான வளங்களுக்கு வேண்டுகோள்களை சமர்ப்பிக்கலாம் | |





# உள்;ர் பங்கேற்கும் தெரிவுகள் பற்றி நீங்கள் அறிய வேண்டியது என்ன

| தெரிவு அடிப்படை | தெரிவு | தெரிவு |
|---|---|---|
| | **குடியிருப்பாளர் சங்கம்**  | **பிரதிநிதித்துவம் இல்லை**  |
| **செயற்பாடு** | குடியிருப்பாளர் பங்கேற்கும் திட்டத்தின் எந்தப் பகுதியும் இல்லை | குடியிருப்பாளர் பங்கேற்கும் திட்டத்தின் எந்தப் பகுதியும் இல்லை |
| **அலுவலர் பொறுப்புக்கூறல்** | குடியிருப்பாளர் சங்கம் சுயாதீனமானது | சமூகம் சுயாதீனமானது |
| **குடியிருப்பாளர் பொறுப்புக்கூறல்** | குடியிருப்பாளர் சங்கம் தீர்மானிக்கும் | சமூகம் தீர்மானிக்கும் |






# வாக்களிக்கும் நடைமுறை பொதுவிளக்கம்




## விழிப்புணர்வுப் பரப்புரை

| கட்டம் | விபரம் |
|---|---|
|  | **முதலாம் கட்டம்:** வெவ்வேறு வகை உள்;ர் பங்கேற்கும் திட்டங்களுக்கு வாக்களிக்கும் முறையை குடியிருப்பாளர்களுக்கு அறிவிப்பது. |
|  | **இரண்டாம் கட்டம்:** வெளித்தொடர்புக;டாக தேர்தல் எப்போது என்பதை அறிவித்து குடியிருப்பாளர் வாக்களிக்க ஊக்குவிப்பது. |

## வாக்களிப்பு நாள்

| கட்டம் | விபரம் |
|---|---|
|  | **மூன்றாம் கட்டம்:** குடியிருப்பாளர் ஒப்பந்தத்தில் குடியிருப்பாளரின் பெயர் உள்ளதா என்பதை அலுவலர் உறுதி செய்வது. |
|  | **நான்காம் கட்டம்:** இத்தேர்தலுக்கான வாக்களிப்பு முறை வீடியோவை குடியிருப்பாளர் ஏற்கனவே பார்க்கவில்லையாயின், தேர்தல் நாளன்று பார்வையிடலாம். |
|  | **ஐந்தாம் கட்டம்:** குடியிருப்பாளர் தமக்கு வழங்கப்படும் வாக்குச் சீட்டை வாக்களிப்புத் திரைக்கு பின்னால் நின்று ஒரு தெரிவுக்கு வாக்களித்த பின் வாக்குப் பெட்டிக்குள் போட வேண்டும். |
|  | **ஆறாம் கட்டம்:** வாக்களிப்பு முடிவடைந்த பின்னர் இரண்டு தன்னார்வக் குடியிருப்பாளர் பகிரங்கமாக வாக்குகளை எண்ணி முடிவை அறிவிப்பர். |
|  | **ஏழாம் கட்டம்:** வாக்குகள் பதியப்பட்டு, அதன் முடிவு பொதுமக்கள் பார்வைக்கு சமூகத்தின் பல இடங்களில் வைக்கப்படும். |

# உங்கள் உள்;ர் பங்கேற்பு தெரிவுகள் தொடர்பான கேள்வி பதில்

## நான் எதற்காக வாக்களிப்பது?

கட்டிட அல்லது ரவுண்ஹவுஸ் மட்ட பங்கேற்பு திட்டத்துக்கு குடியிருப்பாளர்கள் வாக்களிப்பர். இதற்கு நான்கு தெரிவுகள்:

- சமூக பிரதிநிதிகள்
- கட்டிட மற்றும் ரவுண்ஹவுஸ் கமிட்டி
- குடியிருப்பாளர் சங்கம்
- பிரதிநிதித்துவம் இல்லை

## எனது சமூகத்துக்கு ஒரு குடியிருப்பாளர் சங்கம் இருக்குமா?



ரொறன்ரோ சமூக வீடமைப்பில் குடியிருப்பாளர் சங்கம் ஒரு சுயாதீனமான அமைப்பு. எந்தவேளையிலும் ஒரு சமூகம் குடியிருப்பாளர் சங்கத்தை உருவாக்கலாம். இது தொடர்ந்து இயங்கலாம். அல்லது குடியிருப்பாளர் பங்கேற்கும் திட்டத்துக்கு மேலதிகமாக அமைக்க முடியும்.

## யார் வாக்களிக்கலாம்?

ரொறன்ரோ சமூக வீடமைப்பின் குத்தகை ஒப்பந்தத்தில் பெயர் உள்ள 16 வயது அல்லது அதற்கு மேற்பட்ட குடியிருப்பாளர்.

## எப்போது நான் வாக்களிக்கலாம்?

2019 இலையுதிர் காலத்தில் வாக்களிப்பு ஆரம்பமாகும். இரண்டு வாரத்துக்கு முன்னர் குடியிருப்பாளர் இதற்கான அறிவித்தலைப் பெறுவர். சமூகங்களுக்குள் இத் திகதி வேறுபடும்.

## வாக்களிப்புக்கு முன்னர் என்ன நடைபெறும்?

ரொறன்ரோ சமூக வீடமைப்பு வெளிக்கள வாயிலாக பல்வேறு தொடர்பாடல் மூலம் இது தொடர்பான விழிப்புணர்வை முன்னெடுக்கும். வாக்களிப்பு எவ்வாறு இடம்பெறும், பங்கேற்கும் திட்ட தொடர்புகள் பற்றி விளக்கமளிக்கப்படும். இதனை நீங்கள்

<u>வழசழவெழாழரளைபெ.உ ய.ீ.வுநுசு </u>வழியாகச் சென்று வீடியோவைப் பார்வையிட முடியும்.

# ஈடுபாடு கொள்வது

## உங்கள் சமூகத்தில் ஈடுபட விரும்புகிறீர்களா? நல்லது! நாங்கள் உதவுகிறோம்.

புதுப்பிக்கப்பட்ட குடியிருப்பாளர்கள் பங்கேற்கும் திட்டம் தொடர்ந்து செயற்பட நாங்கள் உறுதி பூண்டுள்ளோம். நாங்கள் முன்னோக்கிச் செல்லும்போது நீங்கள் ஈடுபட பலவேறு சந்தர்ப்பங்கள் உங்களுக்குண்டு.

கீழே சில வழிமுறைகள்:

- சமூக செயற்திட்டத்தை நிறைவேற்ற உங்கள் சமூகம் உதவலாம்
- மூல முதலீடற்ற திட்டங்களை அடையாளம் கண்டு, நிதி வகைக்குட்ப திட்டங்களை அபிவிருத்தி செய்ய அடையாளம் காணலாம்.
- உங்கள் சமூக முன்னுரிமைகளை முன்னெடுக்க அல்லது ஒரு நிகழ்ச்சித் திட்ட குடியிருப்பாளர் செயற்திட்ட நிதிக்கு (முன்னைய குடியிருப்பாளர் சபை நிதி) விண்ணப்பிக்கலாம்
- உள்;ர் நிகழ்வுகளில் பங்கேற்பதுடன் முன்னெடுக்கலாம்

நீங்கள் எதிர்பார்க்கும் வகைதுறை வளங்களுடன் தொடர்பு கொள்ள உங்களின் பங்கேற்கும் சமூக சேவைகள் இணைப்பாளருடன் தொடர்பு கொள்க. உங்கள் சமூக சேவைகள் இணைப்பாளர் யாரென்று தெரியாதா? **416-981-5500** இந்த இலக்கத்தை அழைத்தால் உங்களுக்குரிய பொருத்தமானவருடன் தொடர்புகொள்ள உதவுவார்கள்.

பங்கேற்கும் அலுவலர்கள் போதிய பயிற்சி பெற்றவர்களாக ரொறன்ரோ சமூக வீடமைப்பின் உங்கள் தேவைகளை நிறைவேற்ற தயாராக உள்ளனர்.



# யாரைத் தொடர்பு கொள்வது

**ரொறன்ரோ சமூக வீடமைப்பு குழு உறுப்பினர்கள் உங்களுக்கு ஆதரவு வழங்க தயாராக உள்ளனர். கீழே உள்ள தொடர்புப் பட்டியலில் உங்களுக்கு விருப்பமானவருடன் தொடர்பு கொள்ளலாம்.**

**உங்களுக்கு பின்வருவனவற்றில் மேலதிகமான தகவல்களை உங்கள் உள்;ர் சமூக சேவை இணைப்பாளர் வழங்குவார்:**

- சமூக நிகழ்ச்சித் திட்டமொன்றை ஆரம்பிக்க உதவுதல்
- தொடர்பாளர் போஸ்டர்களை தயாரிக்க உதவுதல்
- கூட்டம் நடத்துவதற்கான இடத்தை ஏற்பாடு செய்தல்
- உங்கள் சமூகமும் மற்றும் ரொறன்ரோ சமூக வீடமைப்பும் வழங்கும் சேவைகள் மற்றும் வகைதுறை வளங்கள் பற்றிய மேலதிக தகவல்களைப் பெறுதல்

**குடியிருப்பாளர் பங்கேற்கும் திட்டம் பற்றிய பிந்திய தகவல்கள் வேண்டுமா? இதற்கான எங்களின் ஹொற்லைனை அழையுங்கள்.**

நுபெயபநஅநவெசுநகசநளா;வழசழவெழாழரளைபெ.உய

416-981-4435

## தொடர்பில் இருங்கள்!

வழசழவெழாழரளைபெ.உய.் .வுநுசு

;வுழூாழரளைபெ

ளைபெ

;வழசழவெழாழரளை பெ

;வுழசழவெழஊழஅஅரவைலர்ழர

;வுழசழவெழஊழஅஅரவைலர்ழரள ைபெ

சமூக ஊடகத்தில் எம்மைத் தொடர மறக்க வேண்டாம்!
சூலுழரசஊழஅஅரவைலலுழரசளுயல


ஊழிலசபைாவ HARAN Graph 2019 வுழசழவெழ ஊழஅஅரவைைல ர்ழரளபைெ